# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## HALF YEARLY EXAMINATIONS AND LANGUAGE TESTS – APRIL - 2026

## FIRST CLASS LANGUAGE TEST IN TAMIL – PART – II

## PAPER I – ESSAY

## (FOR ASSISTANT COLLECTORS / POLICE OFFICERS / FOREST OFFICERS)

Time : 3 Hours

Maximum Marks : 100

**1. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு 20 வரிகளில் விடை தருக :**

**(1 × 20 = 20)**

(அ) பாராளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு.

(ஆ) பெரு நிறுவனங்களில் தொடரும் திரளான பணி நீக்கமும் அதற்கான தீர்வுகளும்.

(இ) விவசாய உற்பத்தியில் தன்னிறைவு.

**2. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு 20 வரிகளில் விடை தருக :**

**(1 × 20 = 20)**

(அ) இன்றைய காலமே கல்வியின் பொற்காலம்.

(ஆ) நற்செயல் எல்லாம் நாட்டுப்பற்றே.

(இ) தமிழ்நாட்டை அச்சுறுத்தும் பிரச்சினைகள்.

**3. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் ஐந்தினை மட்டும் வாக்கியத்தில் அமைத்து எழுது :**

**(5 × 3 = 15)**

| | | | |
|---|---|---|---|
| 1. இணையம் | 6. பயணம் | 11. செயல்பாடு | 16. உரிமை |
| 2. மொழிபெயர்ப்பு | 7. தமிழ்வழி | 12. மாசு | 17. செய்தியாளர் |
| 3. அறிவியல் | 8. செயற்கை | 13. தன்னம்பிக்கை | 18. நடவடிக்கை |
| 4. நேர்காணல் | 9. வாழ்த்துகள் | 14. ஊடகம் | 19. தீர்மானம் |
| 5. சிந்தனை | 10. விற்பனை | 15. சுயமரியாதை | 20. போக்குவரத்து |

**4.** **கீழ்க்காணும் மரபுத்தொடர்களில் எவையேனும் ஐந்தை மட்டும் வாக்கியத்தில் அமைத்திடுக :** **(5 × 3 = 15)**

1. கை கூடுதல்
2. தாளம் போடுதல்
3. பொடி வைத்து பேசுதல்
4. நட்டாற்றில் விடல்
5. செவி சாய்த்தல்
6. தலை கீழாய் நிற்றல்
7. பூசி மெழுகுதல்
8. நுனிப்புல் மேய்தல்
9. அள்ளி இறைத்தல்
10. கம்பி நீட்டுதல்
11. ஆயிரங்காலத்துப் பயிர்
12. ஆறப் போடுதல்
13. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது
14. வெட்டு ஒன்று துண்டு இரண்டு
15. கிள்ளுக்கீரை
16. கை பிசைதல்
17. உச்சி குளிர
18. இட்டுக் கட்டுதல்
19. ஆழம் பார்த்தல்
20. கானல் நீர்

**5.** **பின்வரும் இலக்கண வினாக்களில் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்க :** **(5 × 3 = 15)**

(1) குறில் எழுத்தில் தொடங்கும் சொற்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) வானூர்தி

(ஆ) பொதுமை

(இ) குற்றாலம்

(ஈ) கோளரங்கம்

(உ) பௌத்தம்

(ஊ) மின்னல்

(2) நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) தோட்டம்

(ஆ) செறிவு

(இ) ஐந்து

(ஈ) பொருட்காட்சி

(உ) பூப்பந்து

(ஊ) குடும்பம்

(3) சுட்டெழுத்தில் தொடங்கும் சொற்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) இன்மை

(ஆ) அவையம்

(இ) அவ்வீதி

(ஈ) அறப்பணி

(உ) இவ்வுலகு

(ஊ) இந்நூல்

(4) சுட்டுப் பெயர்ச்சொற்கள் அமைந்த தொடர்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) இன்னும் ஒரு பக்கம் எழுதுக.

(ஆ) அவை ஒளிரும் இயல்புடையவை

(இ) அகமகிழ்ந்து உளமார கடவுளைத் தொழு

(ஈ) இவரைப் பார்த்ததுண்டா?

(உ) அவர்கள் பொதுவுடைமை பேசுகிறார்கள்

(ஊ) அவரைப் பிஞ்சு பறித்து வா.

(5) வினாச் சொற்களைக் கண்டறிந்து மூன்றினை மட்டும் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) எதிரொலி

(ஆ) எத்தனை

(இ) யாது ?

(ஈ) எப்போதும்

(உ) எதிர்காலம்

(ஊ) எதற்காக

(6) வினாச்சொற்கள் அமைந்த தொடர்கள் மூன்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(அ) யாதும் ஊரே யாவரும் கேளிர்

(ஆ) காசோலை குறித்து நீவிர் அறிவது யாது ?

(இ) எத்தனால் எரியக்கூடிய தன்மை கொண்டது.

(ஈ) நேர மேலாண்மையை எவ்வாறு அறிந்து கொண்டாய்.

(உ) வார இதழ்களும், நாளிதழ்களும் விளம்பரத்திற்கு ஏற்றவை.

(ஊ) நீ எதற்காக இங்கு வந்தாய்.

(7) திணை சரியாக அமையும்படி பொருத்துக.

(அ) சிறுவன் - குதித்தன

(ஆ) குரங்குகள் - குதித்தனர்

(இ) வீரர்கள் - குதித்தான்

(8) பால் சரியாக அமையும்படி பொருத்துக.

(அ) கண்காணிப்பாளர்கள் - வந்தது

(ஆ) பாரி - வந்தாள்

(இ) குதிரை - வந்தனர்

(ஈ) தங்கை - வந்தன

(உ) விலங்குகள் - வந்தான்

(9) இடம் சரியாக அமையும்படி பொருத்துக.

(அ) அவர்கள் - படித்தோம்

(ஆ) நாங்கள் - படித்தீர்கள்

(இ) நீங்கள் - படித்தார்கள்

(10) பன்மைச் சொற்களைக் கண்டறிந்து மூன்றினைத் தேர்ந்தெழுதுக.

(அ) வளங்கள்

(ஆ) நாம்

(இ) பயனாளி

(ஈ) மாணவியர்

(உ) குறிக்கோள்

**6. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு விடை தருக : (5 × 3 = 15)**

(1) (பிரித்து எழுதுக)

(அ) பயனுடையார்

(ஆ) குளிரூட்டி

(2) (சேர்த்து எழுதுக)

(அ) மெய் + ஞானம்

(ஆ) விண் + நோக்கி

(3) (பொருள் தருக)

(அ) வையம்

(ஆ) கழனி

(4) (பொருள் வேறுபாடு தருக)

இலை – இழை

(பொருத்தமான பெயர்ச்சொல்லை எழுதுக)

(5) ____________ வந்தாள்

(6) கற்களைக் ____________ (குவிந்தனர் / குவித்தனர்)

(7) பாத்திரங்கள் ____________ (பளபள / தகதக) வென மின்னின

(8) பழம் ____________ (தின்றான் / உண்டான்)

(9) (எதிர்ச்சொல் தருக)

(அ) மிகுதி ×

(ஆ) இரத்தல் ×

(10) (அகர முதலி வரிசையில் எழுது)

கூர்மை, கௌதமன், கோடரி, காற்று, கீழடி